செய்தி வெளியீடு எண்: 060 நாள் : 27.01.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அறிவுரைக்கிணங்க வணிகவரித்துறை அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு எம்.சி.சம்பத் அவர்கள் தலைமையில் சென்னை, கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிகவரித்துறை அலுவலக கூட்டரங்கில் இன்று (27.01.2016) நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், 2015–16 ல் டிசம்பர் 2015 வரையில் ரூ.44,282/– கோடிகள் மொத்த வரி வருவாயாக வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வரி வருவாய் 2014–15 ல் வசூலான ரூ.43,517/– கோடிகளுடன் ஒப்பிடும்போது ரூ.765/– கோடிகள் கூடுதல் ஆகும். 2015–16 நிதியாண்டில் நமூனாக்களை கூர்ந்தாய்வு செய்தல் மூலமாகவும், செயலாக்கப்பிரிவிலிருந்து பெறப்பட்டுள்ள கருத்துருக்களை செயல்படுத்துதல் மற்றும் பழைய வரி நிலுவைகளை வசூல் செய்தல் மூலமாகவும் வணிகவரித்துறை அலுவலர்கள் கூடுதல் முயற்சி எடுத்து வரிவருவாயைப் பெருக்கி அதிக வளர்ச்சி விகிதத்தினை எட்டவேண்டும்.

வணிகவரித்துறையின் வரிவிதிப்பு மற்றும் செயலாக்கம் ஆகிய இரு பிரிவுகளும், போலிவணிகம் செய்யும் வணிகர்கள் மீது ஒருங்கிணைந்த தொடர் நடவடிக்கை எடுத்தும், தவறான உள்ளீட்டு வரிவரவு பெற்று பயனடைந்த வணிகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வரி வருவாயினை அதிகப்படுத்த வேண்டும்.

மேலும், எதிர்மறை வளர்ச்சி மற்றும் குறைவான வளர்ச்சி அறியப்படும் வணிக இனங்களில் கூர்ந்தாய்வு செய்து காரணங்களைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், துரித நடவடிக்கை மேற்கொண்டு நிலுவையிலுள்ள வரிவருவாயை வசூலிக்க வேண்டும். அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வரி வருவாய் இலக்கினை அடையவேண்டும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் ஏழை எளிய மக்களுக்கான சிறப்புத் திட்டங்களுக்கு நமது துறையின் மூலம் கிடைக்கும் வரி வருவாய் மிகவும் முக்கியப் பங்காற்றுவதால் நமது துறையின் பணிகள் மிகவும் அர்ப்பணிப்பு உணர்வோடு இருக்கவேண்டும் என குறிப்பிட்டார்கள்.

இந்த ஆய்வின்போது வணிகவரி மற்றும் பதிவுத் துறை முதன்மைச் செயலர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.முகம்மது நசிமுதின், இ.ஆ.ப., அவர்கள், முதன்மைச் செயலர் / வணிகவரித்துறை ஆணையர் திரு.எஸ்.கே.பிரபாகர்,இ.ஆ.ப., அவர்கள், வணிகவரித்துறை கூடுதல் ஆணையர்கள், அனைத்து கோட்ட நிர்வாக மற்றும் செயலாக்கப் பிரிவு இணை ஆணையர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**